[1994 நவம்பர் 4

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் ஆதிதிராவிட நல மாணவர் விடுதியை முதல் கட்டமாகப் பழுது பார்ப்பதற்காக 93,500 ரூபாய்க்கு விரைவில் நிதித்துறையினுடைய ஒப்புதலைப் பெற்று அரசாணை வெளியிடப்படும். அடுத்ததாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை, அங்கே ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் 150 பேர் இருப்பார்களேயானால் அந்த கோரிக்கையை ஏற்று, இதயதெய்வம், தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்ட வினா எண் 2, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2—

நீதிபதிகள் நியமனத்தில் பெண்களுக்கு முப்பது சதவிகித ஒதுக்கீடு செய்தல்.

*20815—**திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பெண்களுக்கு 30 சதவிகித வாய்ப்பு என்ற அடிப்படையில் பெண் நீதிபதிகள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1991 ஆம் ஆண்டு முதல் நீதிமன்ற நடுவர் பணியிடங்களில் நேரடி நியமனத்தைப் பொறுத்தவரையில், 30 சதவீதம் பெண்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி நியமனங்களில் பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதற்கு நன்றி. ஒதுக்கப்படுகிறதே தவிர, நியமிக்கப்படுகிறதா என்பதை நான்

1994 நவம்பர் 4]

அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், பெண்களுக்காக, தமிழகத்தில் எல்லாவற்றிலும், எல்லா இடங்களிலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த சிறப்புக்களைக் கொடுத்து, தமிழகத்தின் தாய்குலத்தின் ஆட்சி என்று பெயர் பெற்ற, சமூகநீதி காத்த வீராங்கனை, தமிழக முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 30 சதவீதம் பெண் நீதிபதிகளை நியமிக்க மீண்டும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் அல்ல, நடைமுறையில் இருக்கிறது. 1991-வது ஆண்டு, மாண்புமிகு முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பெண்கள் நீதிபதிகள் நியமிப்பதிலே ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஒரு புரட்சியையே உருவாக்கி இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்தில் 758 நீதிபதிகள் இருக்கிறார்கள். இந்த 758 நீதிபதிகளில் 81 பேர்கள் பெண்கள் இருக்கிறார்கள். பெண் நீதிபதிகள், இவர்கள் 4 வகைகளிலே இருக்கிறார்கள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜஸ்—ஆக இருக்கிறார்கள். செசன்ஸ் ஜட்ஜஸ்-ஆக இருக்கிறார்கள். சப்-கோர்ட்டில் ஜட்ஜ்-ஆக இருக்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-ஆக இருக்கிறார்கள். ஜுடிசியஸ் மேஜிஸ்ட்ரேட்டாக, ஃபேமிலி கோர்ட்டிலே, நீதிபதிகளாக, இப்படி பல வகைகளில், இன்றைக்கு 81 பெண் நீதிபதிகள் இருக்கிறார்கள். இதில் மிகமிக முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு நல்ல அம்சம், சுதந்திரம் பெற்ற 45 ஆண்டுகளில், 49 பெண் நீதிபதிகள்தான் நியமிக்கப்பெற்றார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த 3 ஆண்டுகளில் 32 பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு 81 பெண் நீதிபதிகள் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்றால், இவர்களது ஆட்சியில், நமது மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், 32 பேர்கள் இன்றைக்கு நீதிபதிகளாக தமிழகம் எங்கும் இருக்கிறார்கள். இனி நீதிபதிகள் நியமனங்கள் வருகிறபோது, 100 நீதிபதிகள் என்றால், அதிலே 30 நீதிபதிகள் பெண்களாக நியமிக்க வேண்டும் என்ற உத்தரவையும் போட்டிருக்கிறார்கள் என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கும் செயல்பாட்டிற்கும் மிக்க நன்றியைத் தெரிவிப்பதோடு,

பெண்களுக்காக 30 சதவீதம் ஒதுக்கீடு கொடுத்து நியமனம் செய்ததற்காக, நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தபோது, 81 பெண்கள் நீதிபதிகள் இருக்கிறார்கள் என்றும், அதில் 32 பேர்கள் கடந்த 3 ஆண்டுகளில் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் பல நீதிமன்றங்களில் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. அப்படி காலியாக இருக்கக்கூடிய இடங்கள் எப்போது நிரப்பப்படும்? அப்படி நிரப்பப்படுகிறபோது, 30 சதவீதம் பெண்களுக்கு உடனடியாக அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். அதோடு **

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்வி நேரத்திலே வேண்டாம், உட்காருங்கள்.மாண்புமிகு சட்ட அமைச்சர். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல, இனி எதிர்காலத்திலே 30 சதவீதம் பெண்களுக்கு நிச்சயமாக ஒதுக்கப்படும் என்பதனை நான் உறுதியாக தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

1—

அரியலூர் தொகுதி கல்லங்குறிச்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி துவங்குதல்.

***35786—டாக்டர் சு. மணிமேகலை :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தொகுதி, கல்லங்குறிச்சியில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றினைத் துவங்க அரசு பரிந்துரை செய்யுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ALONE TRIUMPHS